<u>DEPOSITION OF WITNESS</u>

<u>Judicial Form No. 53</u>

<u>(See Rule 42)</u>

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

Calender : STC No. 241/2019
Miscellaneous :
Preliminary Register :
Sessions :
Deposition of Witness for Respondent : D.W.1

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | சௌந்தர்ராஜன் | ஜாதி | : |
| கிராமம் | : | | இனம் | : |
| தாலூக்கா | : | | வயது | : |
| Mail ID | : | | Mobile No. | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 10.07.2025.

<u>புகார்தாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. இந்த வழக்கில் காசோலை, புரோநோட்டு தாக்கல் செய்துள்ளார்கள் என்றாலும் அதில் உள்ள கையெழுத்து உங்களுடையது தான் என்றாலும் சரிதான். உங்கள் நண்பர் அசோக் மூலமாக தான் புகார்வாதியையும் தெரியும் என்றால் எனக்கு எதிரியையும் அசோக் என்பவரையும் யார் என்று தெரியாது. பொதுவாக ஏதாவது ஒரு பொருள் காணாமல் போனால் காவல் நிலையத்தில் புகார் கொடுக்க வேண்டும் என்ற விபரம் உங்களுக்கு தெரியும் என்றால் ஆமாம். காசோலை காணாமல் போனதால் வங்கியில் கொடுத்துள்ளேன், மற்ற பொருட்கள் காணாமல் போனால் காவல் நிலையத்தில் புகார் கொடுத்து இருப்பேன்.
2. காசோலை திருப்பப்பட்ட பின்னிட்டு புகார்தாரர்அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு வழக்கு சம்பந்தப்பட்ட காசோலை நகல் மற்றும் புரோநோட்டு கேட்டு நானோ அல்லது வழக்கறிஞர் மூலமாக வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பி கேட்டிர்களா என்றால் இல்லை. வழக்கு சம்பந்தப்பட்ட பிராமிசரி நோட்டு காணாமல் போனதாக புகார்

கொடுத்தீர்களா என்றால் புரோநோட்டு காணாமல் போகவில்லை,காசோலை மட்டும் காணாமல் போனதாக புகார் கொடுத்தேன்.

3. உங்களது வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் பிராம்சரி நோட்டு என்னுடையது அதை நான் கொடுக்கவே இல்லை என்றோ, கையெழுத்தை மறுத்து அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் சரிதான்.
4. எந்த ஒரு நபரும் காரணம் இல்லாமல் கையெழுத்து மட்டும் போட்டு வைக்க மாட்டார்கள் என்றால் நான் மூன்று நிறுவனம் நடத்தி வந்தேன், அது சம்பந்தமாக மார்க்கெட்டிங் மற்றும் கலெக்ஷன்க்கு வெளியூர் வழக்கமாக செல்வதால் எனது மேலாளர் இடம் முன் தினமே அடுத்த நாளுக்கு வேண்டிய காசோலைகளை கையெழுத்து மட்டும் போட்டு தருவது வழக்கம். இந்த மாதிரி சங்கதிகள் சொல்லி உங்களது வழக்கறிஞர் பதில் அறிவிப்பில் அறிவிப்பு அனுப்பவில்லை என்றால் ஆமாம்.
5. பதில் அறிவிப்பு அனுப்ப வழக்கறிஞருக்கு அறிவுறுத்தல் நீங்கள் தான் வழங்கினீர்கள் என்றால் ஆமாம். இதுபோன்ற எத்தனை காசோலைகளுக்கு Stop payment கொடுத்துள்ளீர்கள் என்றால் மொத்த இரண்டு செட் காசோலைகளுக்கு கொடுத்துள்ளேன்.
6. காசோலைகளை மிஸ் பிளேஸ் செய்தது யார் என்றால் மேனேஜர். மேனேஜர் பெயர் என்ன என்றால் நல்லமுத்து. அவர் உங்கள் நிறுவனத்தில் பணிபுரிகிறாரா என்றால் அவர் உடல் நல குறைவால் இறந்து நான்கு வருடம் ஆகிறது. அவ்வாறு அந்த ஒரு நபர் சாட்சி சொல்ல வரமாட்டார் என்பதால் கற்பனையாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.
7. இந்த வழக்கு காசோலை போன்று பல காசோலைகளுக்கு காசோலையை கொடுத்துவிட்டு Stop payment கொடுப்பது உங்களது பழக்கம் என்றால் இல்லை. புகாதாரரின் வழக்கறிஞர் அறிவிப்பு பெற்ற பின்னரும் நீங்கள் காசோலை காணாமல் போனது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுக்கவில்லை என்றால் ஆமாம்.
8. சட்டத்திற்கு புறம்பாக ஆதாயம் பெறுவதற்காக முன்கூட்டியே செய்த ஏற்பாடு தான் Stop payment என்பதாகும் என்றால் இல்லை. நீங்கள் தண்டிக்கப்பட வேண்டிய நபர் என்றால் இல்லை.

**மறுவிசாரணை** இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala B.Com., B.L.,

நீதித்துறை நடுவர் எண்.1

உடுமலைப்பேட்டை.